# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.184/2023

## அ.சா. 10 (LW 16 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மில் சிவா | **தொழில்** | |
| **த/க பெயர்** | பாலசுப்பிரமணியன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **19.09.2025.** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி இறப்பு

**முதல் விசாரணை**

நான் தற்போது மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். மில் சிவா டெக்னாலஜிஸ் என்ற பெயரில் சிசிடி கேமரா சேல்ஸ் அன்ட் சர்வீஸ் கடை வைத்திருக்கிறேன். எம்.எஸ்.சி படித்துள்ளேன். கடந்த 08.06.2023 அன்று நகர் மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் எனக்கு மதியம் போன் செய்து என்னை பழனி ரோட்டில் உள்ள பூச்செண்டு பெட்ரோல் பங்க் அருகே வரச் சொன்னார். நான் போனேன். பெட்ரோல் பங்க் அருகில் உள்ள ஜனனா ஓட்டலில் இருந்த கேமரா பதிவுகளை பதிவிறக்கம் செய்து தரும்படி கேட்டார். நான் மேற்படி கேமரா பதிவுகளை 16 GB, HP பென்டிரைவில் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். My choice என்ற 4 GB உள்ள டிவிடி ஒன்றும் கொடுத்தேன். அதற்காக ஒரு சான்றிதழ் கொடுத்தேன். அந்த சான்றிதழ் இதுதான். **அது அ.த.சா.ஆ.7. ஆகும்.** (65(பி) சான்றிதழ்). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லியுள்ளே என்றால் சரிதான். என்னுடைய கடையை பதிவு செய்திருக்கிறேன். மேற்படி பதிவு ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை. நான் கடந்த 12 ஆண்டுகளாக கேமரா தொழில் செய்து வருகிறேன். DVR ல் இருந்த Hard disc ஐ நான் எடுத்துக் கொடுக்கவில்லை. Hard disc ல்

பதிவாகியிருந்ததை நான் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். ஆய்வாளர் என்னை 12.06.2023 அன்று வரச் சொன்னார். வீடியோவில் எடிட், கிராபிக்ஸ் பண்ணக் கூடிய தொழில் நுட்பம் இருக்கிறது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன முறையில் கேமராவில் பதிவிறக்கம் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவஇடத்தைச் சுற்றியும்நிறைய கேமராக்கள் இருந்தது என்றால் சம்பவ இடத்தை பார்த்தாற் போல இருந்த கேமராவில்தான் சம்பவம் பதிவாகி இருந்ததால் அதிலிருந்து நான் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். பெட்ரோல் பங்கிலும் சிசிடி கேமரா இருந்தது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் கேமராவில் பதிவிறக்கம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை – இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.19 19:15:46 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.